# துவாக்குடி நகராட்சி

<table>
<tr><th>மன்ற கூட்ட நாள்</th><th>தீர்மான எண்</th><th>பொருள்</th><th>அலுவலகக் குறிப்பு</th></tr>
<tr><td colspan="4">2021–ம் ஆண்டு நவம்பர் மாதம் 15–ம் தேதி திங்கட்கிழமை காலை 10.15 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும்.</td></tr>
<tr><td>15.11.2021</td><td>673<br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>674<br><br><br><br><br><br><br><br><br>675</td><td>பொருள் எண்.673<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம் துவாக்குடி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மையில் பயன்படுத்தப்பட்டு வந்த உபயோகமற்ற டம்பர் ப்ளேசர் பின்கள் 34 எண்ணிக்கை, பைப்கள் மற்றும் இதர இரும்பு சாமான்கள் பழுதடைந்து உபயோக படுத்த இயலாத நிலையில் உள்ளதால் 12.11.2021 –ம் தேதி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதில் SK Enterprices (திரு. அப்துல் சித்திக்) என்ற நிறுவனம் அதிகபட்ச தொகையாக கிலோவிற்கு ரூ.27/– கோரியுள்ளனர் என்ற ஏலப்புள்ளியை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும், ஏலம் எடுக்காதவர்களின் ஏலவைப்புத் தொகையினை மீண்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: இ1/1033/2019<br>பொருள் எண்.674<br>துவாக்குடி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்TN 81 z3304 ஆண்டு காப்பீட்டு செலுத்த கோரி United india insurance company ltd நிறுவனத்திடம் இருந்து பட்டியல் தொகை ரூ.11,276./ வரப்பெற்றுள்ளது. பட்டியல் கண்ட தொகையினை உரிய நிறுவனத்திடம் செலுத்துவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1729/2018/இ1<br>பொருள் எண்.675<br>2021–22ம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT–ன் கீழ் துவாக்குடி நகராட்சி பகுதிகளில் உள்ள வார்டு எண். 5 ராவுத்தான் மேடு மடத்தான் குளம் மற்றும் வார்டு எண்.1 உடையான் குளம் ஆகிய குளங்களை மேம்படுத்துதல் பணிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.2) துறை, அரசாணை எண்.99 நாள்.12.11.2021 –ல் உள்ளவாறு கீழ்காணும் நிதி ஒதுக்கீட்டின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>(ரூ.இலட்சத்தில்)
<table>
<tr><th>நகராட்சியின் பெயர்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT 2021–22 நிதி</th></tr>
<tr><td>துவாக்குடி</td><td>துவாக்குடி நகராட்சி வார்டு எண். 5 ராவுத்தான் மேடு சர்வே எண். 292 மடத்தான் குளம்</td><td>157.00</td><td>157.00</td></tr>
</table></td><td>அனுமதிக்கப்பட்டது.<br><br><br><br><br><br><br><br><br><br><br><br><br>அனுமதிக்கப்பட்டது<br><br><br><br><br><br><br><br><br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | மேம்படுத்துதல் பணி | | |
| | துவாக்குடி நகராட்சி வார்டு எண். வார்டு எண்.1 உடையான் குளம் சர்வே எண். 184 மேம்படுத்துதல் பணி | 118.00 | 118.00 |
| | **மொத்தம்** | **275.00** | **275.00** |

**அலுவலக குறிப்பு:-** **1.** கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT 2021–22–ன் கீழ் ரூ. 275.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் குளங்களை மேம்படுத்துதல் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.2) துறை, அரசாணை எண்.99 நாள்.12.11.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**2.** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். இ1/1175/2021)**

676

**பொருள் எண்.676**

2021–22ம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT–ன் கீழ் துவாக்குடி நகராட்சி பகுதிகளில் உள்ள மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றி அமைக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.2) துறை, அரசாணை எண்.92 நாள்.30.10.2021 –ல் உள்ளவாறு கீழ்காணும் நிதி ஒதுக்கீட்டின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ரூ.இலட்சத்தில்)

| வ. எ ண் | பணிகளின் விவரம் | நீளம் (கி.மீ) | அக லம் (மீ) | மதிப்பீட் டு தொகை | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT 2021–22 நிதி |
|---|---|---|---|---|---|
| | துவாக்குடி நகராட்சியில் கீழ்காணும் பகுதியில் உள்ள மண் சாலைகளை தார்சாலைகளாக மாற்றி அமைக்கும் பணி | | | | |
| 1 | வார்டு எண்.1 (088001R008) அங்காளம்மன் கோவில் முதல் பைபாஸ் ரோடு வரை | 0.2301 | 4.50 | 234.70 | 234.70 |
| 2 | (088005R103)பிளாட் எண். D41 முதல் பிளாட் எண். D45 | 0.3300 | 7.00 | | |
| 3 | (088005R110) பிளாட் எண். D24 முதல் பிளாட் எண். E16 | 0.1350 | 7.00 | | |
| 4 | (088005R111) பிளாட் எண். E33 முதல் பிளாட் எண். D33 | 0.2100 | 7.00 | | |
| 5 | (088005R112) பிளாட் எண். D32 முதல் பிளாட் எண். D37 | 0.2000 | 7.00 | | |
| 6 | (088005R120) பிளாட் எண். 103 முதல் பிளாட் எண். 79 | 0.3140 | 7.00 | | |
| 7 | (088005R121) பிளாட் எண். 119 முதல் பிளாட் எண். 126 | 0.1280 | 7.00 | | |
| 8 | (088005R122) பிளாட் எண். 74 முதல் பிளாட் எண். 78 | 0.0600 | 7.00 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | (088005R123) பிளாட் எண். 53 முதல் பிளாட் எண். 68 | 0.2360 | 7.00 | | |
| 10 | (088005R124) பிளாட் எண். 86 முதல் பிளாட் எண். 45 | 0.0360 | 7.00 | | |
| 11 | (088005R125) பிளாட் எண். 3 முதல் பிளாட் எண். 2 | 0.0400 | 7.00 | | |
| 12 | (088005R126) பிளாட் எண். 6 முதல் பிளாட் எண். 7 | 0.0435 | 7.00 | | |
| 13 | (088005R127) பிளாட் எண். 12 முதல் பிளாட் எண். 13 | 0.0475 | 7.00 | | |
| 14 | (088005R128) பிளாட் எண். 17 முதல் பிளாட் எண். 19 | 0.0490 | 7.00 | | |
| | **மொத்தம்** | **2.0591** | | **234.70** | **234.70** |

**அலுவலக குறிப்பு:-**

1. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT 2021–22–ன் கீழ் ரூ. 234.70 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் சாலை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.2) துறை, அரசாணை எண்.92 நாள்.30.10.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

677

**(ந.க.எண். இ1/1181/2021)**

**பொருள் எண்.677**

2021–22ம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT திட்டத்தின் கீழ் துவாக்குடி நகராட்சி பகுதிகளில் உள்ள மண்சாலைகளை பேவர் ப்ளாக் சாலைகளாக மாற்றி அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் அமைக்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.2) துறை, அரசாணை எண்.92 நாள்.30.10.2021 –ல் உள்ளவாறு கீழ்காணும் நிதி ஒதுக்கீட்டின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | பணிகளின் விவரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT 2021–22 நிதி |
|---|---|---|---|---|---|
| துவாக்குடி நகராட்சியில் கீழ்காணும் மண்சாலைகளை பேவர் ப்ளாக் சாலைகளாக மாற்றி அமைக்கும் பணி | | | | | |
| 1 | (088001R009) குறுக்கு தெரு தெற்கு பகுதி (அங்காளம்மன் கோவில்) | 0.0877 | 4.10 | 23.60 | 23.60 |
| 2 | (088005L022) ராவுத்தான் மேடு மெயின் ரோடு (தொழிற்சாலை பகுதி) தெற்கு | 0.0801 | 1.70 | | |
| 3 | (088005S054) குறுக்கு தெரு கிழக்கு பகுதி (இந்திரா நகர்) | 0.0600 | 3.50 | | |
| 4 | 088007L023) குறுக்கு தெரு (ராஜுவ் காந்தி) | 0.0858 | 2.30 | | |
| 5 | (088011R231) பாலாஜி மளிகை எதிரில் உள்ள சாலை | 0.1058 | 3.40 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | 0.4194 | | 23.60 | 23.60 |
| 6 | துவாக்குடி நகராட்சியில் வார்டு எண். 11 அய்யம்பட்டி மெயின் ரோட்டில் உள்ள பாலாஜி மளிகை கடைக்கு எதிரில் உள்ள சாலையில் (088011R231) மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 0.1058 | 1.00 | 4.00 | 4.00 |
| 7 | துவாக்குடி நகராட்சியில் வார்டு எண். 11 அய்யம்பட்டி மெயின் ரோட்டில் உள்ள பாலாஜி மளிகை கடைக்கு எதிரில் உள்ள சாலையில் (088011R231) சிறுபாலம் அமைக்கும் பணி | 0.0055 (5.50 M) | 1.80 | 1.10 | 1.10 |
| | மொத்தம் | | | 28.70 | 28.70 |

**அலுவலக குறிப்பு:-** 1. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் KNMT 2021–22–ன் கீழ் ரூ. 28.70 இலட்சம் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் சாலை பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.2) துறை, அரசாணை எண்.92 நாள்.30.10.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

2. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். இ1/1181/2021)**

678

**பொருள் எண்.678**

துவாக்குடி நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு கொரோனா -19 வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ந.க.எண் 6792/MA/V(2)/2020-1 நாள்13.032020ன் படி, நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 5437/J1-2020 நாள் 15.03.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் மின்னஞ்சல் கடிதம் நாள்16.03.2020ன் படி, தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டம் 1939ன்படி அரசு வெளியிட்டில் (No.118, நாள் 13.03.2020) அறிவிக்கப்பட்ட நோயாக உள்ளதால் (NOTIFIED DISEASE), பொது மக்கள் நலன் கருதி நகர்பகுதி முழுவதும் கிருமி நாசினிகள் தெளித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி , அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி கோவிட் சிறப்பு தடுப்பூசி முகாம் (Mega Vaccination Camp) நடைபெறும் இடங்களில் கிருமிநாசினிகள் தெளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது வடகிழக்கு பருவ மழை காலமாக உள்ளதால், டெங்கு நோய் கீழ்கண்ட பகுதிகளில் பரவி வருவதால் ( மாதா கோவில் தெரு, புத்தர் தெரு, ராவுத்தான்மேடு முல்லை தெரு, காமராஜர் தெரு, அன்னை தெரசா 2,3வது தெரு, சர்ச் தெரு, BHEL E2,S2,R3, பெல் நகர், NSK தெரு, திருவள்ளுவர் தெரு, அம்பேத்கார் தெரு, அண்ணா நகர், அக்பர் சாலை, M.K.ஸ்டாலின் தெரு, கடைவீதி, வ.ஊ.சி நகர், சொசைட்டி தெரு) டெங்கு நோய் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், இந்நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பறைகள், பேருந்து நிறுத்த பகுதிகள், மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள போதுமான அளவு கிருமிநாசினிகள் மற்றும் கொசு மருந்துகள் இருப்பில் இல்லாததால் கீழ்காணும் விவரப்படி புதியதாக பொருட்களை வாங்கி வழங்க ரூ.5,00,000/-க்கு உத்தேச செலவினத்திற்கு இந்நகராட்சி தனி அலுவலரின் 08.10.2021ம் தேதிய முன் அனுமதியின்படி கிருமிநாசினிகள் சப்ளை செய்ய 29.10.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி

அனுமதிக்கப்பட்டது

கோரப்பட்டத்தில் கீழ்கண்ட விவரப்படியான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | கிருமிநாசினி விவரம் | தாமரை எண்டர்பிரைசஸ் நிறுவனம்(ரூ) | சரம் என்வீரோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்(ரூ) |
|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்பு (கிலோ ஒன்றுக்கு) | 11.03 | 12.00 |
| 2 | பிளிச்சிங் பவுடர் (கிலோ ஒன்றுக்கு) | 64.90 | 67.00 |
| 3 | அபேட் (லிட்டர் ஒன்றுக்கு) | 1121.00 | 1150.00 |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் **THAMARAI ENTERPRISES A TO Z SERVICE. 8A, 1[ST] CROSS, AMMAYAPPA NAGAR, TRICHY-17.**என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைந்த செலவிமான உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், பில்பட்டியல் வரப்பெற்றவுடன் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் எச்1/401/2020

அனுமதிக்கப்பட்டது.

679

**பொருள் எண்.679**

துவாக்குடி நகராட்சி - பொது சுகாதாரப்பிரிவு கொரோனா -19 வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ந.க.எண் 6792/MA/V(2)/2020-1 நாள்13.032020ன் படி, நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 5437/J1-2020 நாள் 15.03.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் மின்னஞ்சல் கடிதம் நாள்16.03.2020ன் படி, தமிழ்நாடு பொது சுகாதாரச்சட்டம் 1939ன்படி அரசு வெளியிட்டில் (No.118, நாள் 13.03.2020) அறிவிக்கப்பட்ட நோயாக உள்ளதால் (NOTIFIED DISEASE), பொது மக்கள் நலன் கருதி நகர்பகுதி முழுவதும் கிருமி நாசினிகள் தெளித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி , அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி கோவிட் சிறப்பு தடுப்பூசி முகாம் (Mega Vaccination Camp) நடைபெறும் இடங்களில் கிருமிநாசினிகள் தெளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது வடகிழக்கு பருவ மழை காலமாக உள்ளதால், டெங்கு நோய் கீழ்கண்ட பகுதிகளில் பரவி வருவதால் ( மாதா கோவில் தெரு, புத்தர் தெரு, ராவுத்தான்மேடு முல்லை தெரு, காமராஜர் தெரு, அன்னை தெரசா 2,3வது தெரு, சர்ச் தெரு, BHEL E2,S2,R3, பெல் நகர், NSK தெரு, திருவள்ளுவர் தெரு, அம்பேத்கார் தெரு, அண்ணா நகர், அக்பர் சாலை, M.K.ஸ்டாலின் தெரு, கடைவீதி, வ.ஊ.சி நகர், சொசைட்டி தெரு) டெங்கு நோய் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும், இந்நகர் பகுதியில் உள்ள பொது கழிப்பறைகள், பேருந்து நிறுத்த பகுதிகள், மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள போதுமான அளவு கிருமிநாசினிகள் மற்றும் கொசு மருந்துகள் இருப்பில் இல்லாததால் கீழ்காணும் விவரப்படி புதியதாக பொருட்களை வாங்கி வழங்க ரூ.5,00,000/-க்கு உத்தேச செலவினத்திற்கு இந்நகராட்சி தனி அலுவலரின் 08.10.2021ம் தேதிய முன் அனுமதியின்படி கிருமிநாசினிகள் சப்ளை செய்ய 29.10.2021ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்கண்ட விவரப்படியான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | கிருமிநாசினி விவரம் | தாமரை எண்டர்பிரைசஸ் நிறுவனம் (ரூ) | சரம் என்வீரோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் (ரூ) |
|---|---|---|---|
| 1 | லைசால் (லிட்டர் ஒன்றுக்கு) | 174.64 | 175.00 |
| 2 | கருப்பு பினாயில் (லிட்டர் ஒன்றுக்கு) | 84.96 | 85.00 |
| 3 | ஆசிட் (லிட்டர் ஒன்றுக்கு) | 71.98 | 72.00 |
| 4 | சோப்பு ஆயில் (லிட்டர் ஒன்றுக்கு) | 94.40 | 96.00 |
| 5 | EM SOLUTION (லிட்டர் ஒன்றுக்கு) | 1557.60 | 1600.00 |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் **THAMARAI ENTERPRISES A TO Z SERVICE. 8A, 1ST CROSS, AMMAYAPPA NAGAR, TRICHY-17.**என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மிகவும் குறைந்த செலவிமான உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், பில்பட்டியல் வரப்பெற்றவுடன் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்** எச்1/401/2020

**பொருள் எண்.680**

துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் நகராட்சிக்கு வரி செலுத்துவதற்கும் மேலும் பிற சேவைகள் பெறுவதற்கு வருகை தரும் பொது மக்கள் மற்றும் இந்நகராட்சியில் ஆதார்சேவை மையம் இயங்கி வருவதால் மேற்கண்ட சேவை மையத்திற்கு ஆதார் பதிவு செய்வதற்கு வருகை தரும் குழந்தைகள், பெரியவர்கள் ஆகியோரும் மேலும் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குடிநீர் பயன்பாட்டிற்காக இயங்கி வரும் UV Water Purifier கடந்த 2020–ம் ஆண்டு Crossfields Water Purifier Private Limited என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டது. தற்போது அதன் சுத்திகரிப்பான் மற்றும் இதர பராமரிப்பு செலவினங்கள் மேற்கொள்ள உத்தேச செலவினமாக ரூ. **25,000/–** மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.** 253/ இ1 / 2016

**பொருள் எண்.681**

இந்நகராட்சி எல்லைக்குட்ட பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை பயன்படுத்த துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருச்சிராப்பள்ளி ந.க.எண் அ3/4417/2019 நாள் 23.05.2020ம் தேதிய கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண் 1256/2021/அ3, நாள் 10.07.202ம் ததிய கடிதத்தில் கண்டுள்ள விவரப்படி தற்போது ஓம் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் 20 நபர்களை பயன்படுத்தி பணி நடைபெற்று வருகிறது. தற்போது மேற்படி 20 நபர்கள் போதுமானதாக இல்லை என கருதப்படுவதால் மேலும் 6 நபர்களை 17.08.2021ம் தேதி முதல் பயன்படுத்திக்கொள்ளவும் மேற்படியான பணியாளர்களுக்கு ஊதயம் வழங்கவும், மேலும் தற்போது உள்ள 20 பணியாளர்கள் மற்றும் கூடுதல்

பணியாளர்கள் 6 நபர்களையும் சேர்த்து 26 பணியாளர்களை பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு பயன்படுத்திக்கொள்ளவும் ஊதியம் வழங்க உத்தேச செலவினம் ரூ.10,00,000/- மட்டும் (01.12.2021 முதல் 28.02.2022 வரை) பயன்படுத்தி பணி செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் எச்1/738/2020

**பொருள் எண்.682**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்கண்ட விவரப்படியான வாகனங்களுக்கு காப்பீட்டு தொகை செலுத்த கோரி UNITED INDIA INSURANCE CO.LTD., திருச்சிப்பள்ளி என்பவரிடமிருந்து பில்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

1) TN45BY 2588 - Rs.13216/-

2) TN45BY4097 - Rs.31238/-

எனவே, மேற்படி வாகனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தொகையை UNITED INDIA INSURANCE CO.LTD., திருச்சிப்பள்ளி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் எச்1/1470/ 2021

**பொருள் எண்.683**

துவாக்குடி நகராட்சியில் தூய்மை பணிமேற்கொள்வதற்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண் பி3/25580/2015, நாள் 03.03.2016ம் தேதிய செயல்முறை உத்தரவின்படி தனியார் மூலம் தூய்மை பணி மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகர்மன்ற தீர்மான எண் 90, நாள் 18.09.2017ன் படி M/s. SARAM EBVIRO SERVICE PVT.LTD., ஒப்பந்நதம அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகறது. வருட வாரியாக மூன்று ஆண்டு ஒப்பந்தக்காலம் காலநீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 30.11.2021ம் தேதியோடு மேற்படி ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. அரசாணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 30.04.1997ன் படி கூடுதல் தூய்மை பணியாளர்கள அமர்த்திக்கொள்வதற்கு அனுமதி கோரி கடந்த 31.05.2019ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு மேலனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண் ஜே3/2059/2019 நாள் 04.02.2021 மற்றும் 05.02.2020ம் தேதிகளில் கோரப்பட்ட கூடுதல் விவரங்கள் 06.02.2020ம் தேதி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டு நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி உள்ளது.

இந்நிலையில், பொது மக்களின் நலன், பொது சுகாதாரம் , திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடர்ந்து திறம்பட செயல்முறைப்படுத்திட ஏதுவாக, தற்சமயம் தூய்மை பணியை மேற்கொண்டு வரும் M/s. SARAM ENVIRO SERVICE PVT.LTD., என்ற நிறுவத்தின் மூலம் மேலும், 3 மாத காலத்திற்கு தூய்மை பணியினை தொடர மேற்படி நிறுவனத்தன் எழுத்து பூர்வமான சம்மத்தினை தெரிவிக்குமாறு இவ்வலுவலக கடிதம் நாள் 03.112021ன் படி

கோரப்பட்டது.

M/s. SARAM ENVIRO SERVICE PVT.LTD, அவர்கள் 0.11.2021 நாளிட்ட கடிதத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் தினக்கூலி அடிப்படையில் மேலும், 3 மாத காலத்திற்கு பணியினை தொடர சம்மதம் தெரிவித்துள்ளார்.. ஏற்கனவே, நகர்மன்ற தீர்மான எண் 590, நாள் 12.02.2021 6 மாத காலம் கால நீட்டிப்பு செய்து உத்தரவிடப்பட்டு மேற்படி நிறுவனம் மூலம் பணி நடைப்பெற்றது. மேலும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள ஆறுமாத கால காலநீட்டிப்புக்கு அனுமதி கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. தற்போது மேற்படி நிறுவன காலநீட்டிப்பு அளவு 30.11.2021ம் தேதி முடிவடையும் நிலை உள்ளதால் இந்நகராட்சி பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டும் M/s. SARAM ENVIRO SERVICE PVT.LTD சென்னை என்ற நிறுவனத்தின் விருப்ப விண்ணப்பத்தை ஏற்று மேற்படி நிறுவத்தை பயன்படுத்தி பொது சுகாதாரப்பணியை 01.12.2021ம் தேதி முதல் 3 மாத காலத்திற்கு அல்லது நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது ஒப்புதல் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் வரை இதில் எது முந்தியதோ அதுவரையில் தூய்மை பணியாளர்களை தற்போது வழங்கப்பட்டு வரும் தினக்கூலி அடிப்படையில் கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.34,00,000/-க்கு மட்டும் மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு M/s. SARAM ENVIRO SERVICE PVT.LTD சென்னை அவர்களின் 08.11.2021ம் தேதிய விருப்ப விண்ணபத்தின் பேரில் இந்நகராட்சி பொது சுகாதாரப்பணியை கருத்தில் கொண்டு 01.12.2021ம் முதல் 3 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யலாம்.

ந.க.எண் எச்1/13/2011

**பொருள் எண்.684**

துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக **05.11.2021** முதல் பெய்த கன மழையால் North East Monsoon (NEM **2021)** தெருக்களில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்கிறது. சாலைகளில் பொதுமக்கள் செல்ல முடியாத காரணத்தனால் துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் மழைநீர் அதிகமாக தேங்கியுள்ளதை தொடர்ந்து மழைநீரை கம்பரசர் டேங்க் லாரி மூலம் உறிஞ்சி வெளியேற்றுவதற்கு உத்தேச செலவினம் ரூ.**25,000/–** தொகையை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும், பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரிய விவரம் கீழ்கண்டவாறு,

| **வ.எண்** | **விலைப்புள்ளி கோரும் நிறுவனத்தின் பெயர்** | **விலைப்புள்ளி விலை** |
|---|---|---|
| 1 | M/s தாமரை எண்டர் பிரைசஸ் | ரூ.**1400.00**/ ஒரு நடைக்கு |
| 2 | M/s சாரோம் எண்விரோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் | ரூ.**1500.00**/ ஒரு நடைக்கு |
| 3 | M/s ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ் | ரூ.**1550.00**/ ஒரு நடைக்கு |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. தாமரை எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் ஆணையரின் ஒப்புதலுக்கு.

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு:** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15–ன்** கீழ் விலைப்புள்ளி கோரியதற்கும் வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்:**எச்1/1128/2021<br><br>**பொருள் எண்.685**<br>துவாக்குடி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மையில் பயன்படுத்தப்பட்டு வந்த தள்ளுவண்டிகள் மற்றும் டம்பர் பிளேசர் பின்கள் பழுதடைந்து உபயோக படுத்த இயலாத நிலையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதை அதே நிலையில் வருகின்ற **12.11.2021 –ம்** தேதி வெள்ளிக்கிழமை காலை **11.00** மணி அளவில் துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் விடப்பட்டதை விளம்பரம் செய்தமைக்கான பில் பட்டியல் கீழ்கண்டவாறு,<br><table><tr><th>S.NO</th><th>NAME OF THE PUBLICATION</th><th>AMOUNT</th></tr><tr><td>1</td><td>BRIGHT ADVERTISING</td><td>ரூ.7,728/- (193+193 GST)<br>TOTAL : ரூ.8,114/-</td></tr></table>தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு-** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:1033 / E1/ 2019**<br><br>**பொருள் எண்.686**<br>கோவிட் 19 இரண்டாவது அலை பரவுவதை தடுக்கும் பொருட்டும் நோயின் அறிகுறி தென்பட்டவர்களை மருத்துவம் மேற்கொள்ளும் பொருட்டும் துவாக்குடி நகராட்சிக்கு உட்பட்ட NITயில் “கோவிட் நலவாழ்வு மையம்” (COVID CARE CENTER) தற்காலிகமாக அமைய உள்ளதால் 12 தூய்மை பணியாளர்களை காலை மற்றும் மாலை ஆகிய இரு வேலைகளிலும் பணியமர்த்திமேற்படி மையத்திற்கு “சுகாதாரபணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் மற்றும் சார் ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் பணிமுடிவுறும் காலத்திலிருந்து அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் சுற்றறிக்கை ஆணையருக்கு இணங்க பொது மக்கள் நலன்கருதி சுகாதாரம் பேண செப்டம்பர் காலம் வரை பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் மேற்ப பணி தொய்வில்லாமல் செயல்படுத்த அக்டோபர் முதல் டிசம்பர் வரை மூன்று மாத காலத்திற்கு மேற்படி நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.<br>மேலும் CMA ROC NO: 25580-P3/2015 DATE 03.03.2016ன்படி இந்நகருக்கு 54 தூய்மை பணியாளர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட நகர்களை E-TENDER முறையில் SARAM ENVIRO SERVICES PVT.LTD., DOOR NO.11 (NEW NO.12) 2nd Street, Jagadambal Colony Royapetai, Chennai-600014. என்ற நிறுவனத்திற்கு ஒப்புடைப்பு செய்யப்பட்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>மேற்காணும் பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி மட்டுமே மேற்கொள்வதால், தற்போது அரசால் அறிவித்து வரும் COVID 19 தடுப்பூசி முகாம் வாரம் இரண்டு முறை செயல்படுத்தப்படவும் | |

மேலும், வட்டார மருத்துவ அலுவலர் அவர்களின் அறிவுரைப்படி தினசரி கோவிட் மருத்துவ முகாம் இந்நகர் பகுதியில் செயல்படுத்தப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளதால் மேற்காணும் பணி மேற்கொள்ள பணி சுணக்கம் ஏற்படுவதால் ஏற்கனவே பணிபார்த்து வரும் நிறுவனத்திடமிருந்து ஏற்கனவே வழங்கப்பட்டும் வரும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விலைவிகிதப்படி காலை மற்றும் மாலை ஆகிய இரு வேலைகளில் சுகாதாரப்பணி மேற்கொள்ள 12 நபர்களை மேற்காணும் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு பணி மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினத்தை பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து துவாக்குடி நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு.மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் எச்1/13/2011

**பொருள் எண்.687**

துவாக்குடி நகராட்சியில் ஒரு அம்மா உணவகம் தற்போது செயல்பட்டு வருகிறது. மேற்படி அம்மா உணவகத்தில் நாள் ஒன்று ரூ.249./ என்ற தினக்கூலியில் சுய உதவிக்குழு (12) பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில் அம்மா உணவககளில்' பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கான தினக்கூலினியினை நாள் ஒன்றுக்கு ரூ.325./ ஆக உயர்வு செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழ கல் துறை, (**அரசாண எண்-2 நாள் 26.02.2021** அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும் இதற்கான கூடுதல் செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும். என்றும், ஊதியம் மற்றும் நிர்வாக செலவினம் நகராட்சியின் மொத்த வருவாயில் 49 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்வதற்கும் நகராட்சியில் செயல்பட்டுவரும் அம்மா உணவ'களில் பணிபுரிந்துவரும் சுயஉதவிக்குழு பணியாளர்கள் 26.02.2021 முதல் புதிய தினக்கூலி வழகும் வரை உள்ள நாட்களுக்கு நிலுவைத் தொகை வழ க்வும்'தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிது.

**அலுவலக குறிப்பு**

1. அரசாணையினை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. அம்மா உணவகத்தில் பணிபுரிந்து வரும் சுய உதவிக்குழு பணியாளர்களுக்கு 26.02.2021 முதல் தினக்கூலியினை நாள் ஒன்றுக்கு ரூ.325./ என நிர்ணயம் செய்யலாம்.
3. கூடுதல் செலவீனத்தை நகராட்சியின் பொது நீதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.688**

துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக **05.11.2021** முதல் பெய்த கன மழையால் North East Monsoon (NEM **2021)** தெருக்களில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்கிறது. சாலைகளில் பொதுமக்கள் செல்ல முடியாத காரணத்தனால் துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் மழைநீர் அதிகமாக தேங்கியுள்ளதை தொடர்ந்து மழைநீரை மோட்டார் மூலம் உறிஞ்சி வெளியேற்றுவதற்கு உத்தேச செலவினம் ரூ.**2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. மேலும், பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரிய விவரம் கீழ்கண்டவாறு,

| வ.எண் | விலைப்புள்ளி கோருபவரின் பெயர் | விலைப்புள்ளி விலை |
|---|---|---|
| 1 | எம். பொன்னுசாமி | ரூ.296.50/Hr |
| 2 | எம். ஜீவானந்தம் | ரூ.297.00/Hr |
| 3 | எஸ்.ஏ. அரசு | ரூ.298.50/Hr |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு. எம். பொன்னுசாமி என்பவரின் விலைப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கும் ஆணையரின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:** மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் விலைப்புள்ளி கோரியதற்கும் வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்: இ1/1434/ 2021**

**பொருள் எண்.689**

துவாக்குடி நகராட்சியில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP 2020-21) நிதியின் கீழ் கீழ்கண்ட விபரப்படி 18 எண்ணிக்கையிலான (3 சிப்பங்கள்) சாலைப்பணிகள் ரூ.600.00 இலட்சத்தில் மேற்கொள்ள (நிதி ஒதுக்கீடு TUFIDCO கடன்:ரூ.510.00 இலட்சம் + நகராட்சி பங்குத்தொகை: ரூ.90.00 இலட்சம்) நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.2057/2020/இ3 நாள்.14.12.2020ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.23659/2020/டிஓ2 நாள்.19.12.2020ன் படி தொழில்நுட்ப அனுமதி பெற்று இந்நகராட்சி செயல்முறை உத்தரவு ந.க.எண்.1305/2020/இ1 நாள்.22.01.2020ன்படி பணி உத்தரவு வழங்கி பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| | சிப்பம் – 1 | | | |
| 1 | சிட்கோ தொழிற்பேட்டை பிளாட் எண்.D1 முதல் D16 வரை | 1.020 | 9.00 | 200.00 |
| 2 | சிட்கோ தொழிற்பேட்டை பிளாட் எண்.A1 A முதல் A1F வரை | 0.225 | 9.00 | |
| 3 | சிட்கோ தொழிற்பேட்டை பிளாட் எண்A1A முதல் A1G வரை | 0.225 | 9.00 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | சிட்கோ தொழிற்பேட்டை மேற்கு பகுதி பிளாட் எண்.A1M | 0.070 | 9.00 | | | |
| | | | **மொத்தம்** | **1.540** | | **200.00** | | |
| | | | **சிப்பம் – 2** | | | | | |
| | | 1 | சிட்கோ தொழிற்பேட்டை ஷெட் எண். 1 முதல் 12 வரை | 0.330 | 9.00 | | | |
| | | 2 | சிட்கோ தொழிற்பேட்டை ஷெட் எண்.13 முதல் 24 வரை | 0.335 | 7.50 | | | |
| | | 3 | சிட்கோ தொழிற்பேட்டை பிளாட் எண்.25 முதல் 37 வரை | 0.355 | 7.50 | 200.00 | | |
| | | 4 | சிட்கோ தொழிற்பேட்டை பிளாட் எண்.71 முதல் 60 வரை | 0.360 | 7.50 | | | |
| | | 5 | சிட்கோ தொழிற்பேட்டை பிளாட் எண்.1 முதல் 72 வரை | 0.360 | 7.50 | | | |
| | | | **மொத்தம்** | **1.740** | | **200.00** | | |
| | | | **சிப்பம் – 3** | | | | | |
| | | 1 | வள்ளுவர் தெரு , | 0.160 | 4.50 | | | |
| | | 2 | மாரியம்மன் கோவில் தெரு | 0.300 | 4.50 | | | |
| | | 3 | S டைப் பிளாட் எண்.S1/178 முதல் S1/10 வரை | 0.320 | 6.00 | | | |
| | | 4 | டைனி ஷெட் ரோடு | 0.180 | 4.50 | | | |
| | | 5 | பெல் நகர் மெயின் தெரு மற்றும் குறுக்குத் தெருக்கள் | 1.645 | 4.50 | 200.00 | | |
| | | 6 | பரகத் நகர்மெயின் தெரு மற்றும் குறுக்குத் தெருக்கள் | 0.570 | 4.50 | | | |
| | | 7 | இம்மானுவேல் நகர் மெயின்ரோடு | 0.220 | 4.50 | | | |
| | | 8 | சொசைட்டி தெரு | 0.190 | 4.50 | | | |
| | | 9 | செடிமலை முருகன் கோவில் தெரு | 0.815 | 4.50 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **4.400** | | 200.00 |
| | **ஆகமொத்தம்** | **7.680** | | **600.00** |

மேற்கண்ட பணிகளில் சிப்பம் 1 மற்றும் 2 –ல் 9 எண்ணிக்கையிலான பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. முடிக்கப்பட்ட 1 மற்றும் 2 சிப்பம் பணிகளுக்கு சிறப்பு சாலைகள் திட்ட நிதி (TUFIDCO Loan) ஒதுக்கீட்டின் படி முதல் தவணைத்தொகை ரூ.255.00 இலட்சம் மற்றும் பொது நிதியிலிருந்து ரூ. 131.87 இலட்சம் ஆக மொத்தம் ரூ.386.87 இலட்சம் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. சிப்பம் 3–ல் 9 எண்ணிக்கையிலான பணிகளில் 3 எண்ணிக்கையிலான பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 6 பணிகள் விரைந்து முடிக்க ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கடிதம் மற்றும் தொலைபேசி வாயிலாக பலமுறை தெரிவிக்கப்பட்டு தற்போது வரை பணி துவங்கப்படாத நிலையில் உள்ளதால் கீழ்காணும் விபரப்படி 6 எண்ணிக்கையிலான தார்சாலை பணிகள் மேற்படி திட்டத்திலிருந்து கைவிடுவதற்கும் இப்பணிக்கு வேறு ஏதேனும் திட்ட நிதியின் கீழ் மான்யமாக வழங்கிட நகராட்சி நிர்வாக இயக்ககுநர், சென்னை–28 அவர்களை கேட்டுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்** | **மதிப்பீட்டின் படி வ.எண்** | **வேலையின் பெயர்** | **சாலையின் நீளம் (கி.மீ)** | **மதிப்பீடு (ரூ.லட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| | | **சிப்பம் – I** | | |
| 1 | 1 | வள்ளுவர் தெரு , | 0.160 | 116.00 |
| 2 | 2 | மாரியம்மன் கோவில் தெரு | 0.300 | |
| 3 | 5 | பெல் நகர் மெயின் தெரு மற்றும் குறுக்குத் தெருக்கள் | 1.645 | |
| 4 | 6 | பரகத் நகர்மெயின் தெரு மற்றும் குறுக்குத் தெருக்கள் | 0.570 | |
| 5 | 7 | இம்மானுவேல் நகர் மெயின்ரோடு | 0.220 | |
| 6 | 8 | சொசைட்டி தெரு | 0.190 | |
| | | **மொத்தம்** | **3.085** | **116.00** |

**அலுவலக குறிப்பு:**மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**1305/2020/இ1

**பொருள் எண்.690**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21287/2021/EA2 நாள் 02.10.2021ம்தேதிய சுற்றறிக்கையின் படி வெளிக்கொணர்வு முகமை மூலம் குடிநீர் பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| **பணியின் விவரம்** | **தேவையான பணியாட்களின் அளவுகோல்கள்** | **துவாக்குடி நகராட்சி விபர கணக்கீடு** | **பராமரிப்பு உதவியாளர்** |
|---|---|---|---|
| நீரேற்று நிலையத்தை இயக்கி பராமரித்தல் | மின்னாளர் – 3<br>பராமரிப்பு உதவியாளர் – 3 | 0 | 0 |
| குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர் – 3<br>பராமரிப்பு உதவியாளர் – 3<br>நீர் பகுப்பாய்வக உதவியாளர் 1 | 0 | 0 |
| குடிநீர் வடிகட்டி படுகை இயக்கி பராமரித்தல் | குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர் | 0 | 0 |
| குடிநீர் நீரேற்று நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர் – 3<br>பராமரிப்பு உதவியாளர் – 3 | 0 | 0 |
| பூஸ்டர் நிலையம் | பராமரிப்பு உதவியாளர் – 2 | 0 | 0 |
| சூமல்நிலை தொட்டிகள் தரை மட்ட தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணிகள் | I. 1LL வரை கொள்ளளவு கொண்ட தொட்டி 4 இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர் – 1 | 0 | 0 |
| | II. 1LL முதல் 2LL க்கு குறைவான கொள்ளளவு தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர் – 1 | 1 | 1 |
| | III. 2LL முதல் 5LL வரை கொள்ளளவு தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர் – 2 | 2 | 4 |

| | | | |
|---|---|---|---|
| | IV. 5LL க்கு அதிகமான கொள்ளளவு தொட்டி இருப்பிடத்திற்கு பராமரிப்பு உதவியாளர் – 3 | 1 | **3** |
| பகிர்மான குழாய்கள் இல்லாத பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல் | குடிநீர் வாகனம் – 1<br>ஓட்டுநர் –1<br>துலக்குநர் –1 | 0 | **0** |
| | | **4** | **8** |

இதன்படி மேற்படி பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு:

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs. | Total salary per day per person ( col No.3 * 1.18509) Rs. | Total salar y per mont h per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engaged | Total Budget to be provide d per year Rs in Lakhs | Total Value to be put in to tender Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | OHT Maintan ance worker | 581 | 689 | 20670 | 2.48 | 8 | 19.83 | - |
| Total estimated cost including GST,EPF,ESI,EPF admin, EDLI and agency charges | | | | | | | 19.83 | |

எனவே துவாக்குடி நகராட்சிக்கு தேவைப்படும் **குடிநீர் பணியாளர்கள் 8 நபர்களை**, வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச தொகை (19.83)**ரூ.59.49** இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. குடிநீர் பணியின் முக்கியத்துவம் கொண்டு நிர்வாக அனுமதி பெற்று வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாளர்களை நியமனம் செய்யவும் மேலும் ஏற்படும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் E1/1290/2021

**பொருள் எண்.691**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21287/2021/EA2 நாள் 02.10.2021ம்தேதிய சுற்றறிக்கையின் படி வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்கள் பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி இந்நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| Sl. No. | Items | Requirement as per norms | Present Strength | Balance needed |
|---|---|---|---|---|
| 1 | BOV | 33 | 14 | 19 |
| 2 | LCV | 7 | 2 | 5 |
| 3 | HCV | - | - | - |
| 4 | Tractor | - | - | - |
| 5 | JCB | 1 | 1 | 0 |
| 6 | Cleanliness Worker | 82 | 14 | 68 |
| 7 | Supervisor | 11 | 0 | 11 |
| 8 | Driver | 6 | 1 | 5 |

இதன்படி மேற்படி பணியாளர்களை மூன்றாண்டுகளுக்கு தொடர்ந்து பணியமர்த்தும் போது ஏற்படும் உத்தேச செலவினம் பின்வருமாறு:

| Sl. No | Name of the Post | Basic Salary per day per person as per SoR or as approved in Rs. | Total salary per day per person ( col No.3 * 1.4251) Rs. | Total salar y per mont h per person Rs. | Total salary per annum per person Rs .in lakhs | No. of person to be engage d | Total Budget to be provide d per year Rs in Lakhs | Total Value to be put in to tender Rs. In lakhs |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Sanitary worker | **461** | **546.33** | **16390** | **1.97** | **68** | **112.45** | **-** |
| 2 | supervisor | **562** | **666.02** | **19981** | **2.40** | **11** | **21.24** | **-** |
| 3 | Driver | **708** | **839.05** | **25172** | **3.02** | **5** | **12.74** | **-** |
| **Total estimated cost including GST,EPF,ESI,EPF admin, EDLI and agency charges 27.1)** | | | | | | | **173.54** | |

எனவே துவாக்குடி நகராட்சிக்கு தேவைப்படும் **தூய்மை பணியாளர்கள் 68 நபர்கள், மேற்பார்வையாளர்கள் 11 நபர்கள் மற்றும், ஓட்டுநர்கள் 5 நபர்கள்,**ஆகியோர்களை வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் முதன்மை அனுமதி பெற்று பணியமர்த்தி கொள்ளவும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படும் உத்தேச தொகை (173.54)**ரூ.520.62** இலட்சம் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. திடக்கழிவு மேலாண்மை பணியின் முக்கியத்துவம் கொண்டு நிர்வாக அனுமதி பெற்று வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாளர்களை நியமனம் செய்யவும் மேலும் ஏற்படும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் H1/ 1283/2021**

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.